செய்தி வெளியீடு எண்: 29 நாள் : 11.01.2011.

**<u>2009–2010 ஆம் ஆண்டிற்கான சிப்காட் நிறுவனத்தின்</u>**

**<u>ஆதாய பங்குத் தொகை 14 கோடியே 48 இலட்சம் ரூபாய்!</u>**

**<u>மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்</u>**

**<u>மாண்புமிகு துணை முதலமைச்சர் வழங்கினார்!</u>**

சிப்காட் நிறுவனம் 1971ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, கடந்த 40 ஆண்டுகளாக பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில் வளாகங்கள், தொழிற் பூங்காக்கள் மற்றும் தொழிற் மையங்களை உருவாக்கி, தமிழகத்தை தொழில் மயமாக்குவதில் முக்கியப் பங்காற்றி வருகிறது.

சிப்காட் நிறுவனம் 2009–2010ஆம் ஆண்டில் தனது உயர்ந்த செயலாக்கத்தின் மூலம் 302 கோடியே 9 இலட்சம் ரூபாயினை மொத்த வருமானமாகவும், 92 கோடியே 19 இலட்சம் ரூபாயினை நிகர இலாபமாகவும் ஈட்டியுள்ளது.

சிப்காட் நிறுவனம் 2005–2006ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தமிழக அரசுக்கு ஆதாயப் பங்குத் தொகையினை வழங்கி வருகின்றது. இந்த ஆண்டிற்கான ஆதாயப் பங்குத் தொகையான 14 கோடியே 48 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை இன்று (11.1.2011) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப. மற்றும் சிப்காட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.

* * *